# நடாதூர் அம்மாள்
# வாழி திருநாமம்

சுத்த குண விட்டுசித்தன் சுடரடியோன் வாழியே
ச்ருதப் ப்ரகாசிகையைச் சொல்லி வைத்தோன் வாழியே
தத்வ ப்ரமேயத்தின் தரம் அறிந்தோன் வாழியே
புத்தி மிகு சாரார்த்த சதுஷ்டயத்தோன் வாழியே
புகழ் பாடியப் பொருளைப் புதர்க்களிப்போன் வாழியே
சித்திரையில் சித்திரை நாள் கச்சி வந்தோன் வாழியே
சீராரும் அம்மாள் தன் சேவடிகள் வாழியே

திங்கள் போன்ற திருமுகம் வாழியே
திருமண் காப்புத் திகழ் நெற்றி வாழியே
தொங்கு முப்புரி நூல் மார்பு வாழியே
தோன்று இலச்சினைத் தோள் மிக வாழியே
தங்கு கோசம் விளங்கு கை வாழியே
தாங்கு சின்முத்திரை விரல் வாழியே
பொங்கு வத்ஸ குல வரதாரியன்
பொன்மலர்ப் பாதம் வாழிய வாழியே

---